## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.19/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | சுதா |
| Husband Name: | சந்திரசேகரன் |
| Village : | மேட்டுபாளையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 35/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.11.2023.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி முருகன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மேட்டுபாளையம் தெற்கு கிராம அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் பிம்பலூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் முருகன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 11.07.2022 ம் தேதி எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அதிகாலை சுமார் 5.30 மணியளவில் பிம்பலூர் காமாட்சி அம்மன் கோவில் அருகே உள்ள கல்லாற்றில் மணல் திருடுவதாக கிடைத்த தகவலின் அடிப்பபடையில் நானும், எனது உதவியாளர் ஜோதிவேலும் அங்கு சென்று பார்த்தபோது பதிவெண் இல்லாத மகேந்திரா பொலிரோ பிக்அப் வண்டியில் சிமெண்ட் சாக்கு மூட்டையில் மணலை அள்ளி போட்டு கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்ததும் ஓட

முயற்சித்தார்கள். அவரை மடக்கி பிடித்ததில் அவர் பெயர் முருகன் என்றும், அவர் தான் ஆஜர் எதிரி என்றும் தெரிய வந்தது.

(ii) எதிரியையே மேற்படி வண்டியை ஓட்ட சொல்லி நானும், உதவியாளரும் வி.களத்தூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்பட்ட ஆவணம் அவ்வாறு நான் கொடுத்த புகார் ஆவணம் தான். (அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் மேற்படி 10 மூட்டை மணலுடன் கூடிய வாகனத்தை கைபற்றி தயாரித்த படிவம் 91ல் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நான்கு சக்கர வாகனத்தை தான் நாங்கள் போலிசாரிடம் ஒப்படைத்தோம். (அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரி தரப்பு எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.19/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | ஜோதிவேல் |
| Father Name: | | கந்தசாமி |
| Village | : | பிம்பலூர் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 57/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.11.2023.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி முருகன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போதும், சம்பவ சமயத்திலும் பிம்பலூர் கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் முருகன். சம்பவத்தின் போது அவரை பார்த்தேன். அ.சா.1–சுதா ஏற்கனவே சம்பவ சமயத்தின் போது எங்கள் கிராமத்தில் VAO–ஆக பணிபுரிந்தார். 07.11.2022 ம் தேதி எனக்கு அதிகாலை சுமார் 5.30 மணியளவில் VAO–சுதா எனக்கு போன் செய்து பிம்பலூர் காமாட்சி அம்மன் கோவில் அருகே உள்ள கல்லாற்றின் அருகே வர சொன்னார்கள். அங்கு சென்ற போது VAO–வும் வந்து விட்டார்கள். அங்கு TATA AC வாகனம் நின்று கொண்டிருந்தது. ஆட்கள் இல்லை. சத்தம் போட்ட பிறகு எதிரி வந்தார். வண்டியில் 10 சாக்குகள் மணல் இருந்தது. வண்டியை எதிரியை எடுக்க சொன்னோம்.

(ii) எதிரியையே மேற்படி வண்டியை ஓட்ட சொல்லி நானும், VAO–வும் வி.களத்தூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். VAO புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைப்படத்தில் உள்ள வாகனத்தை தான் நாங்கள் போலிசாரிடம் மேற்படி ஒப்படைத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரி தரப்பு எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.